அசல் வழக்கு எண்.203/2018 வா.சா.1 திலகம் க/பெ மணி

**04.01.2024 2ம் பிரதிவாதிதரப்பில் குறுக்குவிசாரணை**

1. 1ம் பிரதிவாதி பழனிக்கு கடனுறுதிச்சீட்டின் பேரில்தான் கடன் கொடுத்தேன் என்றும் சொத்தின்பேரில் கடன் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் 2ம் பிரதிவாதியின் கையெழுத்து உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

2. நான் 1ம் பிரதிவாதி பழனிக்கு கடன் கொடுத்தது 2ம் பிரதிவாதி பாரதிக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி பழனி 2ம் பிரதிவாதி பாரதியிடமிருந்து அடமான கடனாக ரூ.7,00,000/-கடன் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு கடன் தொகை திரும்ப கொடுக்கவில்லை என்பதால் 2ம் பிரதிவாதி இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.49/2019 தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கிற்கும் 2ம் பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் 2ம் பிரதிவாதி தேவையற்ற நபராக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியை பொறுத்த வரையில் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.